Statements on Women in Sangam Literature from a Narratological Perspective

P. Rahulkanthi
Research Scholar, Department of Tamil
SRM School of Science and Humanities
SRM Institute of Science and Technology, Kattankulathur, Chengalpattu District

N. Ranjan
Assistant Professor, Department of Tamil
SRM School of Science and Humanities
SRM Institute of Science and Technology, Kattankulathur, Chengalpattu District

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.17256001

Abstract
Every poem fundamentally possesses a narrative quality. Narratology is the scientific study of how such poems are structured and how the structure conveys the story the poem seeks to tell. By analyzing the language, dynamics, and subtle nuances of a poem, narratology enables deep dialogue and multifaceted interpretation of literary works. This article specifically examines the statements about women—particularly the psychology of a widow—presented in Sangam literature, analyzing them from a narratological perspective to highlight how these depictions are conveyed and understood.
Keywords: *Narratology, A.J. Greimas, Vladimir Propp, Structure, Women*

References
1. K. Panchangam – Modern Poetry Studies: A Narratological Approach – Kavya Publications, Chennai, 2003.
2. Ilampuranar (Editor) – Tolkappiyam: Poruladhikaram (Part III) – Mullai Publications, 2024.
3. U.V. Saminathavaiyar (Commentary) – U.V. Saminathavaiyar Library, Chennai – 10th Edition, 2022.
4. K. Palanivel – Poetic Language & Political Transformation – Maatru Publishers, Chennai, 2018.
5. K. Palanivel – Silappathikaram: Narratological Commentary & Theoretical Perspective – Maatru Publishers, Chennai, 2018.
6. A. Palaiyan – Narrative and Commentary of Natrinai – Saradha Publications, Chennai, 2019.
7. Puliyur Kesikan – Purananuru: Original Text and Commentary – Saradha Publications, 7th Edition, 2019.
8. K. Palanivel – Theory and Skills of Narratology – Annam Publications, Thanjavur, 2020.
9. K. Siva – Narratology of Pathuppattu – Lakshmi Publications, Thirupathur, 2020.

எடுத்துரைப்பியல் நோக்கில் சங்க இலக்கியக் கைம்பெண்கள் குறித்த கூற்றுகள்

பெ. ராகுல்காந்தி
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் கலையியல் புலம்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்

முனைவர் ந. இரஞ்சன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலம்
எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்

ஆய்வுச் சுருக்கம்

எந்த ஒரு பனுவலும் அடிப்படையில் ஒரு கதைத் தன்மையைப் பெற்றிருக்கும். இத்தகையப் பனுவல் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன அக்கட்டமைப்பு பனுவல் கூறும் கதையினை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதனை விளக்கமாக ஆராய்வதே எடுத்துரைப்பியல் ஆகும். இது ஒரு பனுவலில் பேசப்படும் மொழிகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து அதன் இயக்கத்தனையும் நுட்பத்தையும் அரிய வழி செய்கிறது. இதன் மூலம் ஒருபனுவலின் மீது ஆழமான உரையாடல் நிகழ்த்தவும் பன்முக நோக்கில் விரித்து செல்லவும் இயலும். இந்நிலையில் கணவனை இழந்த பெண்ணின் உளவியலை கூறும் கைம்பெண்கள் குறித்த கூற்றுகளை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: *எடுத்துரைப்பியல், ஏ.ஜெ.கிரிமாஸ், விளாடிமிர்ப்ராப், முன்னம், கைம்பெண்*

முன்னுரை

எந்த ஒரு பனுவலும் அடிப்படையில் ஒரு கதைத் தன்மையைப் பெற்றிருக்கும். இத்தகைய பனுவல் கட்டமைக்கப்பட்டுள்ள விதத்தையும் அக்கட்டமைப்பு, பனுவல் கூறும் கதையினை வெளிப்படுத்தியுள்ள தன்மையினையும் விளக்கி கூறுவதே எடுத்துரைப்பியல் ஆகும். இது ஒரு பனுவலில் பேசப்படும் மொழிகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து அதன் இயக்கத்தினையும் நுட்பத்தையும் அறிய வழி செய்கிறது. இதன் மூலம் ஒரு பனுவலை ஆழமான உரையாடல் நிகழ்த்தவும் பன்முக நோக்கில் விரித்துச் செல்லவும் இயலும். சங்க இலக்கியம் பண்டைய தமிழர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு வாழ்வியல் களஞ்சியமாகத் திகழ்கின்றது. பழந்தமிழகத்தில் மகளிர் கல்வியறிவில் சிறந்து விளங்கினர். கவிபாடும் வல்லமை பெற்றுச் சிறந்து விளங்கியுள்ளனர். இவ்வாறு திகழ்ந்த மகளிரின் வாழ்க்கையைச் சங்க இலக்கியம் காலக் கண்ணாடி போன்று எடுத்துரைக்கின்றது. எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள கைம்பெண்கள் குறித்த கூற்றுகளை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆய்ந்து சங்க காலத்தில் கணவனை இழந்த பெண்கள் வாழமறுத்து உடன்கட்டை ஏறத்துணிந்ததற்கான காரணத்தைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையாகும்.

எடுத்துரைப்பியல்

எடுத்துரைப்பியல் என்ற சொல் பிரெஞ்சுச் சொல்லான Narratologic என்பதன் தமிழ்வடிவமாகும். ஆங்கிலத்தில் இது Narratology எனப்படுகின்றது. இந்த எடுத்துரைப்பியல் என்ற சொல்லுக்கு இணையாக தமிழில் கதையாடல், சொல்லாடல், கவிதையியல் ஆகிய சொற்களும் பயன்பாட்டில் உள்ளது இக்கட்டுரையில் எடுத்துரைப்பியல் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துரைப்பியலானது அமைப்பியல் கோட்பாட்டை அடிப்டையாகக் கொண்டு தோன்றிய கோட்பாடாகும். அதனாலயே ஒரு பனுவலின் அமைப்பினைக் கொண்டு விளக்கமுறப்படுகின்றது. பனுவல் தான் கொண்டுள்ள அமைப்பினைக் கொண்டு தனக்குள் இருக்கும் கதையினை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதனை ஆராய்ந்து விளக்குகின்றது.

விளாடிமிர்ப்ராப்

விளாடிமிர்ப்ராப்ரஷ்ய நாட்டு உருவவியலாளர்களுள் மிகக் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் தான் முதன்முதலில் எடுத்துரைப்பியல் குறித்துச் சிந்தித்தவர். “இவர் தன்னுடைய நாட்டுப் புறக்கதைகளின் அமைப்பியல் (Morphology of Folk Tales) என்ற நூலினை நூலில் ஒரு கதையை நகர்த்திச் செல்லும் கதைமாந்தர்களைச் சில வகைகளாக இனம் கண்டார்.

1. எதிர்நிலைத் தலைவன்
2. வழங்குபவன்
3. உதவியாளன்
4. கதைத்தலைவி / இளவரசி
5. போலித்தலைவன்
6. வழியனுப்புபவன்
7. கதைத்தலைவன்

ஓர் எடுத்துரைப்புப் பனுவலில் மேற்கூறிய ஏழு கூறுகளும் அல்லது அவற்றுள் ஒன்று அல்லது இரண்டு குறைந்து வரும் என்று கூறுகிறார். இவை மட்டுமில்லாமல் நாட்டுப்புறக் கதைப்பனுவலில் இடம்பெறுவனவாக 32 அடிப்படை அலகுகளைத் தெரிவு செய்து விளக்கியுள்ளார்.

(கி.சிவா பத்துப்பாட்டின் எடுத்து ரைப்பியல் பக். 10 - 11)

ட்ஸ்வெடன் டோடரோவ்

பிரெஞ்சு நாட்டினரான ட்ஸ்வெடன்டோடரோவ் அமைப்பியல், வரலாறு, தத்துவம் ஆகிய துறைகளில் பங்களிப்புச் செய்தவர். சொற்களால் வெளிப்படுத்தப்படுகின்ற தொடர் நிகழ்வுகளே எடுத்துரைப்பு பனுவலாகின்றன என்று குறிப்பிடும் இவர் எடுத்துரைப்பு பனுவலில் கதைமாந்தர் கடந்து வருவதாக ஐந்து படிநிலைகளைக் குறிப்பிடுகிறார்.

1. சமநிலை (Equilibriyum)
2. இடையூறுகள் தோன்றுதல் (Disruption)
3. அங்கீகாரம் (Recongnition)
4. தேசங்களைச் சீரமைத்தல் (Repail The Damage)
5. மீண்டும் சமநிலை (Equilibriyum again)

(கி.சிவா பத்துப்பாட்டின் எடுத்துரைப்பியல் ப. - 08) எனக் கூறி எந்தவொரு எடுத்துரைப்பு பனுவலிலும் இவை ஐந்தும் இடம்பெறும் என்கிறார்.

ஏ. ஜெ. கிரிமாஸ்

“ஏ.ஜெ. கிரிமாஸ் என்பவர் விளாடிமிர்ப்ராப்பைத் தொடர்ந்து இத்துறையில் மிகுதியான பங்களிப்புச் செய்தவராவார். இவர் தனது ஆய்வுகளில் ப்ராப்பின் கோட்பாடுகளைச் சிறிது மேம்படுத்தி உலகத்தில் உள்ள அனைத்து இலக்கியங்களுக்கும் பொருத்திப் பார்க்கும் வகையில் ப்ராப்பின் ஏழு கூறுகளுக்கு மாற்றாக மூன்று இரட்டை எதிர்நிலை இணைகளைக் கூறினார்.

1. எழுவாய் * செயப்படு பொருள்
2. அனுப்புனர் * பெறுநர்
3. துணைசெய்வோர் * எதிர்ப்போர்

(கி.சிவா பத்துப்பாட்டின் எடுத்து ரைப்பியல் பக்க எண். 12)

ஜெரார்டு ஜென்னட்

"ஜெரார்டு ஜென்னட் என்பவர் பிரெஞ்சு கொள்கையாளர். இவர் ஒரு அமைப்பியல் சிந்தையாளார். இவர் தான் எழுதிய எடுத்து ரைப்பில் சொல்லாடல் பற்றிய நூலில் ஒரு எடுத்துரைக்கப்பட்ட பனுவலைப் பல்வேறு எடுத்துரைப்பு கூறுகளுடன் இணைத்தே காண வேண்டும் எனக் கூறி இக்கூறுகள் பனுவலில் தனித்தே இயங்க வல்லவை எனினும் ஒரு பனுவலில் அவை ஒருங்கிணைகின்றன என்று விளக்குகிறார். ஜெரார்டு ஜென்னட் புனைகதை எடுத்துரைப்பை மூன்று தளங்களில் காண்கிறார். அவை

1. கதை (Story)
2. சொல்லாடல் (Discourse)
3. எடுத்துரைப்பு (Narration)

(கி.சிவா பத்துப்பாட்டின் எடுத்து ரைப்பியல் ப. 13)

இதனை அடிப்படையாகக் கொண்டு தான் க. பஞ்சாங்கம் தான் எழுதிய நவீன கவிதையியல் எடுத்திரைப்பியல் என்னும் நூலில் எடுத்துரைப்பியலுக்கான அலகுகளை மூன்றாகப் பிரித்துள்ளார்

1. நிகழ்ச்சிகள்
2. நிகழ்ச்சிகளுக்கான வார்த்தைக் குறியீடுகள்
3. எடுத்துச் சொல்லும் அல்லது எழுதும் செயல்பாடு

இவற்றினை முறையே புனைகதை எடுத்துரைப்பிலுக்கு ஏற்றவாறு மறுபெயரிட்டு கொள்ளலாம் என்று கூறிக் கீழ்க்கண்டவாறு கூறுவார்

- கதை
- பனுவல்
- எடுத்துரைப்பு (ப. 6)

இவர் ஜெரார்டு ஜென்னட் சொன்னதைத் தான் சொல்லி இருக்கிறார். சொல்லாடல் என்பதைத் தான் இவர் பனுவல் என்ற பெயரில் குறிப்பிடுகிறார். இம்மூன்று பிரிவுகளுக்கும் விளக்கம் தரும் இவர் தொடர்நிகழ்ச்சிகளாக அமைந்திருப்பதே கதை என்றும் மேலும் இந்நிகழ்ச்சிகள் அவை பங்கெடுக்கும் பனுவலின் பிறநிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்திக் கொண்டு காலவரிசையில் மறுவுருவாக்கம் செய்யப்படுகின்றன என்று கூறுகிறார். இந்நிலையில் பனுவல் என்பது பேசுகின்ற அல்லது எழுதுகின்ற சொல்லாடலாக அமைகின்றது என்றும் எடுத்துரைப்பு என்பது பனுவலை உருவாக்கும் செயல் அல்லது செயல்பாட்டு முறை என்றும் விளக்குகிறார்.

"ஒரு எடுத்துரைப்பு பனுவல் மேற் கண்டகதை, எடுத்துரைப்பு ஆகிய இரண்டு கூறுகளால் தான் வரையறுக்கபடுகின்றன எனக் கூறும் இவர்.

1. ஒரு பனுவல் ஒரு கதையைச் சொல்லாவிட்டால் அது ஓர் எடுத்துரைப்பாக இருக்க முடியாது.
2. எடுத்துரைப்பு இல்லாத பட்சத்தில் அது ஒரு பனுவலாகவும் இருக்க முடியாது.

என்று கூறுவதன் மூலம் இவர் கதை, எடுத்துரைப்பு ஆகிய இரண்டுமே பனுவலின் ஆகுபெயர் என்று கூறுகிறார். இதன் வழிகதைக்கும் எடுத்துரைப்புக்கும் ஒரு நுட்பமான உறவு இருக்கிறது. அவ்வுறவை விளக்குவது தான் எடுத்துரைப்புக் கோட்பாடு என்று கூறுகிறார். (ப. 7)

மிகேல்பக்தின்

இவர் ஒரு ரஸ்ய அறிஞர் ஆவார். "ஒரு மொழியென்பது வெறுமனே விதிகளின் தொகுப்பு என்ற அணுகுமுறை என்னும் சசூர் உடையகருத்தை மறுத்து, சமுதாயத்தில் அது ஒரு தொடர்பு கருவியாகாது என்று கூறிப் படைப்புக் கூறு கொண்ட சாதனமாகப் பயன்படுவதை முன்னிலைப்படுத்தி, அதனை அருவமொழி (langue) என்று பார்க்காமல் உருவமொழியாகத் தான் பார்க்க வேண்டும் என்று கூறி, அதன் செயல்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறார். வேற்றுமைப்படுத்தல் மூலமாகவே மொழி இயங்குகின்றது என்பது மொழியின்

இயக்கத்திற்கான சரியான விளக்கம் ஆகாதென்றும் பேசுபவன், கேட்பவன், பேச்சு நிகழ்கின்ற காலம், இடம் அகியவை இல்லாமல் சொல்லும் தொடரும் பொருண்மை பெறமுடியாதென்றும் அறிவுறுத்தினார். ஒரு சொல்லோ, தொடரோ பெற்றுள்ள அகராதிப் பொருளை விட அது பேசப்படும் சூழலில் பெறுகின்ற பொருளே முக்கியமானது என்பது பக்தினின் நிலையாகும். இதன் அடிப்படையிலேயே அவர் தனது கூற்றுக் கோட்பாட்டை (theory utterance) அமைத்துக் கொள்கிறார்.

பேசுபவனிடமும், கேட்பவனிடமும் சூழலில் ஒரு தனிச் சொல்லும் தொடரும் வாக்கியமும் கூற்றுகளே. சிறு கவிதையும் காப்பியமும் புதினமும் கூடக் கூற்றுகள் தான் என்கிறார் பக்தின். கூற்று பேச்சு வடிவத்திலும் எழுத்து வடிவத்திலும் அமையலாம். வெறும் அகாரதிப் பொருள் மட்டும் கொண்ட அளவில் விளக்கம் காணாமல் பேசுபவன், கேட்பவன், சூழல், ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளாத நிலையில், சொல்லும் தொடரும் வாக்கியமும் கூற்றுகள் ஆகா. கூற்று தனித்து நிற்கும் தன்மையதன்று. முன்னால் சென்ற கூற்றோடும் பின்னால் வரும் கூற்றோடும் தொடர்புடையாது. பக்தின் பேச்சு வகைமைகள்(speechgeners) மொழிக்குஉருவம் தருகின்றன. மொழியை உருவாக்கும் ஆற்றல் படைத்தது என்று கூறுகின்றார். பேச்சு வகைமைகள் பேசுவோன், கேட்போன் ஆகியோருக்குள்ள உறவால் மட்டுமல்லாமல், கூற்று நிகழும் காலம் இடம் ஆகியவற்றாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. அவை ஒரு சமுதாய உறவின் உண்மை நிகழ்ச்சியிலிருந்து உருப்பெறும் என்கிறார்[6].

(முனைவர் ப. மருதநாயகம் மேலை நோக்கில் தமிழ்க் கவிதை பக். 231-232)

மேற்கூறிய அனைத்துக் கோட்பாடுகளுமே எடுத்துரைப்பு பனுவலுக்கென்று ஏதோவோர் அமைப்பினை உருவாக்கி அல்லது கருத்தில் கொண்டு பனுவலில் கூறவரும் கதையினை ஆளமாகச் சிந்திக்க முற்படுகின்றன. இவை அனைத்தும் தொடர்நிகழ்ச்சிகளால் அமையும் புனை கதையினை விளக்கவே உருவாக்கப்பட்ட கோட்பாடுகளாக இருந்தாலும் புறநானூற்றின் தன்னுணர்ச்சிப் பாக்களிலும் இப்பண்புகள் இருப்பதை மறுக்கவியலாது. சங்க அக இலக்கியங்கள் அகத்திணை, கூற்று என்ற அமைப்புகளில் பாடப்பட்டு இருக்கும். இதன் திணை துறைகள் பாடல்களில் இடம்பெறும் கருப்பொருள், உரிப்பொருள் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன. அதே புற இலக்கியங்கள் புறத்திணை, துறை என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் அகத்திணையைப் போல் கூற்றுகள் இடம்பெறுவதில்லை. இருந்த போதிலும் மொழிகள் கூற்றுகளால் தான் இயங்குகின்றது என்னும் பக்தின் கோட்பாட்டைக் கருத்தில் கொண்டு, இக்கட்டுரையில் புறப் பாடல்களிலும் கூற்று, கேட்போர் உள்ளிட்ட அமைப்புகளைக் கண்டறிந்து அதன் மூலம் அப்பாடலின் ஆழமான கருத்தினை வெளிக்கொணர இக்கட்டுரை முற்படுகின்றது. என்ன தான் எடுத்துரைப்பு என்னும் பதம் தற்காலக் கட்டங்களில் எடுத்துரைப்பியல் கோட்பாடாக மேலைநாட்டு அறிஞர்களால் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தாலும் இக்கோட்பாடு குறித்துத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் செய்யுளியளில் ஒரு கருத்தைக் கூறும் செய்யுள் இந்த உறுப்புகளைக் கொண்டு தான் அமைந்திருக்கும் என்று கூறி 34 செய்யுள் உறுப்புகளை வகைப்படுத்தியதன் வழி சிந்தித்துள்ளார். எனவே தொல்காப்பியர் எடுத்துரைப்பியல் கோட்பாட்டின் முன்னோடியாக திகழ்கிறார். இச்செய்யுள் உறுப்புகள் அடிப்படையில் தமிழின் சங்கச் செய்யுள்கள் தோன்றியுள்ளது. எனவே, சங்க இலக்கியச் செய்யுள்களை எடுத்துரைப்பியல் கோட்பாட்டு நோக்கில் ஆய்வு செய்ய இச்செய்யுள் உறுப்புகளை மேலைநாட்டு எடுத்துரைப்பியல்

கோட்பாட்டோடு பொருத்தி பார்த்து ஆய்வது தான் சிறந்தாக அமையும். ஆகையால் கே. பழனிவேலு சங்க இலக்கியத் தன்னுணர்ச்சிப் பாக்களை மிகேல் பக்தினின் கூற்று கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சங்கக் கவிதை மொழி-அரசியல், சிலப்பதிகார எடுத்துரைப்பு கூற்றுக்கோட்பாடு நோக்கு, கோட்பாடும் திறனாய்வும் போன்ற நூல்களில் விளக்குவதை முன்மதிரியாகக் கொண்டு இக்கட்டுரையில் எடுத்துரைப்பியல் கோட்பாடானது மிகேல்பத்தினின் கூற்றுக் கோட்பாட்டுடன் தமிழ் கவிதைகளின் அமைப்பினை விளக்கும் தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகளில் சிலவான கூற்று, கேட்போர், களன், காலம், முன்னம், பொருள் முதலியனவற்றைப் பொருத்தி விளக்கம் காண்பது சிறப்பானதாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

கூற்று என்ற செய்யுள் உறுப்பைத் தொல்காப்பியர் 34 செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூறியிருப்பினும் அதற்கான வரையறை எதுவும் கூறவில்லை. மாறாகக்களவில் கூற்று நடத்துபவர்கள், கற்பில் கூற்று நடத்துபவர்கள், எடுத்து மொழியப்படுபவர்கள் முதலியனவற்றை விரிவாகக் கூறியுள்ளார். மேலும் யார்யாரிடம் கூற்று நடத்தலாம் என்ற வரையறைகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் விரிவாகக் கூறியுள்ளார். களவில் கூற்று நிகழ்த்து பவர்கள் - பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி. கற்பில் கூற்று நிகழ்த்துபவர்கள் - பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி, பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர். கூற்றுக்கு ஆகாதார்- ஊரார், அயலார், வல்லவர், தந்தை, தமையன். புறப் பாடல்கள் சில இக்கூற்று பிரிவுக்கு உட்பட்டுவராத நிலையில் அதனைப் புலவர் கூற்றாக அதாவது எடுத்துரைப்பாளன் கூற்றாக எடுத்துக் கொள்ளலாம்.

கேட்போர் என்ற உறுப்பைக் கூற்றுடன் ஒப்பு நோக்கலாம். தொல்காப்பியர் கூற்றுக்குறியவர்களையே கேட்போராகச் சுட்டுகிறார். மக்கள் அல்லாதோரும் கூற்றிற்கு உரியராவர் என்று கூறி மரம், பொழுது, கார்காலம், மாலைப் பொழுது, பறவைகள் முதலிய அஃறிணைப் பொருட்களையும் சுட்டிச் சொல்கிறார். இவையின்றிக் கேட்பவர் தனக்குள்ளும் கூற்று நிகழலாம் என்றும் விளக்குகிறார்.

வாயில் உசாவே தம்முளும் உரிய
(தொல். பொருள். 500)

களன்

ஒரு நெறிப்பட்டாங் கோரியல் முடியுங்
கருமநிகழ்ச்சி இடமென மொழிப
(தொல். பொருள். 502)

இதன் பொருள் ஒரு பொருண்மையை அடியொட்டி முடியும் வினை நிகழும் களத்தை இடம் எனப் புலவர்கள் கூறுவர். இதன் வழிப்பனுவலில் வரும் கதை ஊடாடும் இடம் களம் எனப்படும்.

காலம்

இறப்பே நிகழ்வே எதிரது என்னும்
திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உணர
பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்.
(தொல். பொருள். 503)

மூன்று காலங்களின் திறத்தினை ஆராய்ந்து செய்யுளில் இடம்பெறும் பொருள்களின் செயல் நிகழ்ச்சிகளைக் கூறுவது காலமாகும்.

முன்னம்

இவ் இடத்து இம்மொழி இவர் இவர்க்கு உரிய என்று

அவ் இடத்து அவர் அவர்க்கு உரைப்பது முன்னம்

(தொல். பொருள். 508)

ஒரு செய்தியினைக் கூறுபவர் அதனை உரிய இடத்தில் உரிய காலத்தில் உரிய நபரிடம் கூறுவது முன்னம். இதுகாலம்,

இடம், கூற்று ஆகியவற்றுள் உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது.

பொருள்

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்று இவை இழுக்கு நெறி இன்றி
இது ஆகு இத் திணைக்கு உரிப் பொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள் வகை என்ப.
(தொல். பொருள். 509)

எந்த ஒரு சார்பும் இல்லாமல் இச்சொல்லுக்கு இப்பொருள் என்று கூறுவது பொருள் வகை என்பர்.

மிகேல்பக்தின் கோட்பாட்டு வழி இச்செய்யுள்ளுறுப்புகளின் விளக்கங்களைக் கொண்டு எட்டுத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள கைம்பெண்கள் குறித்த கூற்றுகளை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆராய்ந்து இக்கட்டுரை விளக்கவுள்ளது.

எட்டுத்தொகையில் கைம்பெண்களின் குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் கைம்பெண்கள் குறித்து மொத்தம் ஒன்பது கூற்றுகள் காணப்படுகின்றன. அவற்றில்புறம் 246, 280, 250 ஆகிய மூன்றும் பெண்பாற்புலவர்களால் பாடப்பட்டனபுறம் 25, 125, 224, 261, 326, நற்353 ஆகிய ஆறும் ஆண்பாற்புலவர்களால் படாப்பட்டது.

கைம்பெண்களின் பெண்களின் வேறுபெயர்கள்

- ஆளில் பெண்டிர் (நற்.353:1)
- கழிகல மகளிர் (புறம். 280:14)
- பருத்திப்பெண்டிர் (புறம்.125:1)
- தொடிகழி மகளிர் (புறம்.238:6)
- கைம்மை (புறம்.25:11, 261:17)
- படிவமகளிர் (நற்.272:2)
- உயவற்மகளிர் (புறம்.246:10)

பெண்பாற் புலவர்களின் கூற்றுகள்

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் மனைவியான பெருங்கோப்பெண்டு 246ஆவது பாடலையும் தாயங்கண்ணியார்புறம் 250ஆவது பாடலையும் மாறோகத்து நப்பசலையார் புறம் 280ஆவது பாடலையும் பாடியுள்ளனர்.

பெருங்கோப்பெண்டு பாடியபாடல் (முதல்கூற்று).

இவர் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் மனைவி ஆவர். தன் கணவன் போர்களத்தே இறந்து படதாமும் உடன்கட்டை ஏறுகிறார். அப்போது இவரை தடுத்த சான்றோரை எதிர்த்து கைம்மையின் துயரை கூறி பாடல் இது. இவறாள் பாடப்பட்டது இப்பாடல் ஒன்று மட்டிமே.

பல்சான்றீரே! பல்சான்றீரே!
செல்கெனச் சொல்லாது, ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சி பல்சான்றீரே!
அணில்வரிக் கொடுங்காய்வாள் போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர்நறு நெய்தீண்டா
அடையிடைக் கிடந்தகை பிழிபிண்டம்
வெள்என் சாந்தொடு புளிப்பெய்தட்ட
....
வள்இதழ் அவிழ்ந்ததாமரை
நளிஇரும் பொய்கையும், தீயும் ஒரற்றே!
(புறம். 246).

- பாடியவர் - ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப்பெண்டு.
- திணை- பொதுவியல்.
- துறை - ஆனந்தப் பையுள் (பையுள்- துன்பம்) கணவனை இழந்த மகளிர் துன்பத்தில் பாடுவது.
- கூற்று - தலைவி.
- கேட்போர் - சான்றோர் (அறிவர்).
- களன் - இடுகாடு
- காலம் - உடன்கட்டை ஏறாதே என்று சான்றோர் அறிவுரை கூறியது இறந்தகாலம். அறிவர் உரையை

மறுத்துத் தலைவி கூறுவது நிகழ்காலம். கணவன் இறந்த பின்பு உடன்கட்டை ஏறாமல் இருந்து கைம்மை நோன்பு மேற்கொள்ளுவதனால் வரும் துன்பதை எடுத்துரைப்பது எதிர்காலம். ஆகையால் இப்பாடல் முக்காலத்தையும் உள்ளடக்கியதாய்த் திகழ்கின்றது.

- *பொருள் - உன் கணவனோடு நீயும் இறந்து போ என்று சொல்லாது தடுத்து நிறுத்த பல்வேறு மொழிகளைக் கூறி, சூழ்ச்சி செய்யும் சான்றோர்களே! கேளுங்கள். கணவனை இழந்து விட்டு வெள்ளரி விதைப் போன்ற வெள்ளைச் சோற்றை நெய் சேர்க்காமல் புளிசேர்த்து உண்டு விட்டு கற்கள் மேல்படுக்கும் துயரக் கைம்பெண்டிராய் வாழ்தலை விட என் கணவன் எரியும் தீயில் சாம்பலாவதே மேல் இத்தீயே தாமரைக்குளத்துநீர் போன்று குளுமையானதாகும்.*

மாறோகத்து நப்பசலையார் பாடிய பாடல் (இரண்டாம் கூற்று).

மாறோகத்து நப்பசலையார் புறநானூற்றில் மொத்தம் ஏழு பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் 280ஆவது பாடலானது கணவனை இழந்து கைம்மை மேற்கொள்ளும் கைம்பெண்ணின் கூற்றாகயுள்ளது.

என்னை மார்பில் புண்ணும் வெய்ய;
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்;
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா;
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்;
அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்;
நெல் நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா;
துடிய! பாண! பாடுவல் விறலி!
என் ஆகுவிர்கொல்? அளியிர்; நுமக்கும்
இவண் உறை வாழ்க்கையோ, அரிதே! யானும்
மண்ணுறு மழித் தலைத் தெண் நீர் வார,
தொன்று தாம் உடுத்த அம் பகைத் தெரியல்
சிறு வெள் ஆம்பல் அல்லி உண்ணும்
கழி கல மகளிர் போல,
வழி நினைந்திருத்தல், அதனினும் அரிதே!
(புறம் 280ஆவது)

- *பாடியவர் - மாறோகத்து நப்பசலையார்*
- *திணை- பொதுவியல்.*
- *துறை - ஆனந்தப்பையுள் (பையுள்- துன்பம்) கணவனை இழந்த மகளிர் துன்பத்தில் பாடுவது.*
- *கூற்று - தலைவி.*
- *கேட்போர் - பாணன், விறலி*
- *களன் - வீடு*
- *காலம்- மூன்று காலம்*

தலைவன்போரில்விழுப்புண்பட்டதைக் கூறிய வழி இறந்த காலத்தையும் தலைவனின் உயிர் பிரிகின்ற தருவாயில் நிலையினைக் கூறிய வழி நிகழ்காலத்தையும் தலைவன் இறந்த பின்பாணர்கள், விறலிகள் போன்றோரின் நிலை, தலைவன் இறந்த பிறகு தலைவிக்கு ஏற்படவுள்ள கைம்மை நோன்பு குறித்த செய்தியைக் கூறிய வழி எதிர்காலத்தையும் இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது.

பொருள்

போர்க்களத்தில் தலைவன் மார்பில் பட்ட புண் பெரிதாக இருப்பதனால் வண்டுகள் வந்து மொய்க்கின்றன, வீட்டிலே ஏற்றி வைத்த விளக்கும் அடிக்கடி அணைகின்றது. உறங்காது, அவனருகே பல நாள் இருந்த எண் கண்களும் தாமாகவே மூடுகின்றன. கூகையும் கூவுகின்றது. நெல்லும் நீரும் எறிந்து, இவன் பிழைப்பான் என்று குறி செல்லிய செம்முதுப் பெண்டின் சொல்லும் பொய்கின்றதே! தலைவன் இறந்தால் இனி இங்கு உங்களுக்கு யார்வேண்டிய பொருள்களைத் தருவார்? நீங்கள் என்ன ஆவீர்கள்? இனி இங்கு இருந்து வாழ்தல் உங்களுக்கு அரிது. நீங்கள் வேரிடம் சென்று வாழுங்கள். தலைவன் இறந்த பின்பு மொட்டை அடித்துக் கொண்டு அல்லி

அரிசியை உணவாக உண்டு வாழும் கழிகல மகளிர் போலத் துயர்வாழ்கை அனுபவத்துக் கொண்டு வாழ்தல் அதனிலும் அரிது. அதனால் தலைவன் இறந்த பிறகு நானும் தலைவனுடனே இறந்து விடுவேன் எனக் கூறித் தலைவனின் இறப்பை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டு இருக்கும் தலைவியின் நிலையை இப்பாடல் கூறுகின்றது.

தாயங்கண்ணியார் பாடிய புறம் 250ஆவது பாடல்

குய் குரல் மலிந்த கொழுந் துவை அடிசில்
இரவலர்த் தடுத்த வாயில், புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண் நறும் பந்தர்,
கூந்தல் கொய்து, குறுந் தொடி நீக்கி,
அல்லி உணவின் மனைவியொடு, இனியே
புல்லென்றனையால் வளம் கெழு திரு நகர்!
வான் சோறு கொண்டு தீம் பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித் தலைப் பெருங் காடு முன்னிய பின்னே

- பாடியவர் -தாயங்கண்ணியார்
- திணை- பொதுவியல்
- துறை - தாபதநிலை
- கூற்று - சான்றோர்
- கேட்போர் - மக்கள்
- களன் - வீடு
- காலம் - இரண்டு காலம்

தலைவன் இருந்த போது தலைவியின் நிலையைக் கூறிய வழி இது இறந்த காலத்தையும் தலைவன் இறந்த பின் தலைவின் மேற்கொண்டு இருக்கும் கைம்மை நோன்பின் துன்பத்தினைக் கூறிய வழி நிகழ்காலத்தையும் இப்பாடல் உணர்த்துகிறது

பொருள்

வழியே செல்லும் இரவலர்களைத்தடுத்து நிறுத்திய வாயிலையும் அவர்களின் கண்ணீரைத் தடுத்து அருளிய பந்தரையும் உடைய மனையே! உன்னிடத்தில் இருந்து எங்களுக்கு உணவழித்த பெண் தற்போது கணவன் இல்லாத போது தன் தலைமயிரைக் கொய்து, வளையல்களைக் களைந்து, அல்லியரிசி உணவு உண்ணும் நிலையைப் போல் நீயும் அவனில்லாதே பொலி வழிந்து காணப்படுகிறாயே!

இதில் முதல் இரண்டு கூற்றுகளையும் உற்று நோக்கும் கால் கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பினை ஏற்க மறுத்து தன் தலைவனோடு இறப்பதே சிறந்தது என்று தன் உயிரை மாய்த்துக் கொல்லும் அளவிற்குக் கைம்மை நோன்பின் துன்பம் இருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. முதல் கூற்றில் தலைவி கைம்மை நோன்பை மேற்கொள்வதன் மூலம் வரும் துன்பத்துக்கு என் கணவன் எரியும் தீயில் நானும் எரிந்து சாவதே மேலானது. அத்தீ தாமரைக்குளம் போன்று குளிர்ச்சி உடையது என்று கூறும் வழி கைம்மை நோன்பின் துன்பத்தை உணர இயல்கின்றது. மூன்றாவது கூற்று கைம்மை நோன்பு மேற்கொள்ளும் பெண்ணின் நிலையைக் கூறுகையில் அதன் துன்பத்திற்கான காரணத்தை உணர முடிகின்றது.

இக்கூற்றுகளில் கைம்பெண்களுக்கு அவர்களின் முடிஎடுக்கப்படுகின்றது என்றும் அவர்களுக்கு உணவாக நெல்லரிசிச் சோறு தராமல் அல்லி விதையால் ஆனா சோற்றைத் தருவதோடு அதனுடன் நெய் கலக்காமல் வெறும் புளியை மட்டும் சேர்த்து உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாடும் அவர்கள் தரையில் எந்த ஒரு துணியோ பாயோ இல்லாமல் கற்கள் மேல் தான் படுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் என இவைகள் அனைத்தும் கைம்பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் ஆணாதிக்கப் போக்காகத் தான் காட்சியளிக்கின்றன. கைம்பெண்கள் குறித்து ஆண்பாற் புலர்களின் கூற்றை நோக்குவதன் மூலம் சங்க கால ஆணாதிக்கப் போக்கைத் தெளிவுர உணரயியலும்.

ஆண்பாற் புலவர்களின் கூற்றுகள்

கல்லாடனார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய புறம் 25 ஆவது பாடலிலும் வடமவண்ணக் கண் பெருஞ்சாத்தனார் தேர்வணமலையன் என்பவனைப் பாடிய புறம் 125 ஆவது பாடலிலும் கருங்குழல் ஆதனார் சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாடிய புறம் 224 ஆவது பாடலிலும் ஆவூர்மூலங்கிழார் புறம் 261 ஆவது பாடலிலும் தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் பாடிய புறம் 326 ஆவது பாடலிலும் கபிலர் பாடிய 353 ஆவது பாடலிலும் எனக் கைம்பெண்கள் குறித்து ஆண்பாற் புலவர்கள் பாடியதாக மொத்தம் ஆறு கூற்றுகள் காணப்படுகின்றன.

முதல் கூற்று

அவிர் அறல் கடுக்கும் அம்மென்
குவையிரும் கூந்தல் கொய்தல்கண்டே.
(புறம் 25:12-13).

இக்கூற்றில் தலையாலங்கானத்துப் பாண்டிய நெடுஞ்செழியன் தான் போர் செய்வதன் மூலம் இறக்கும் வீரர்களின் மனைவிகள் கைம்மைப் பூண்டு கூந்தல் இழந்து வாழும் நிலையை எண்ணிப் போர் செய்வதைக் கைவிட்டான் என்று இப்பாடல் உரைக்கின்றது.

இரண்டாம்கூற்று

பருத்தி பெண்டின் பணுவல் அன்ன
(புறம் 125:1).

மூன்றாம்கூற்று

பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
(புறம்326:5)

நான்காம்கூற்று

ஆளில்பெண்டிர் தாளின் செய்த
நுணங்கு நுண்பனுவல் போலக் கணங்கொள
(நற்353:1-2).

இம்மூன்று கூற்றுகளிலும் கைம் பெண்கள் செய்யும் தொழிலாகப் பருத்தி ஆடை செய்யும் தொழில் கூறப்படுகின்றது.

ஐந்தாம் கூற்று

பூவாட்கோவலர் பூவுடன் உதிரக்
கொய்துகட்டு அழித்த வேங்கையின்
மெல்லியல் மகளிரும் இழைகளைத் தனரே!
(புறம் 224:15-17).

இக்கூற்றுச் சோழன் கரிகாற் பெருவளத்தான் இறந்த பிறகு அவன் மகளிர் பூவையும் இலையையும் இழந்த வேங்கை மரத்தைப் போல அழகிழந்து காணப்படுகின்றனர் என்று கூறுகின்றது.

ஆறாம் கூற்று

கொய்ம் மழித்தலை யொடு கைம்மை யுறக்கலங்கிய
கழிகலம் மகடூஉப் போலப்
புல்என் றனையால்பல் அணி இழந்தே

ஆவூர் மூங்கிழார் முன்பு தான் பரிசு பெற்ற ஒரு கரந்தை வீரன் இல்லத்திற்கு மீண்டும் செல்கிறார். அப்போது அவன் போரில் வீரமரணம் அடைந்த செய்தி கேட்டுப் பாடிய பாட்டு. அவ்வீரன் இழந்த பின்பு அவன் இல்லமானது அவன் மனைவி கைம்மை நோன்பு மேற்கொண்டு கூந்தல் இழந்து பொலி விழந்து காணப்படும் தோற்றம் போல் காட்சி அளிக்கின்றது என்று அவ்வீரனின் இல்லத்தின் நிலையைக் கூறுகிறார் புலவர்.

மேற்கூறிய ஆறு கூறுகளிலும் முதல் (கல்லாடனார்) கூற்றைத் தவிர வேறு எந்தக் கூற்றிகளிலும் கைம் பெண்களின் வாழ்வின் துன்பதைக் கூறவில்லை. மாறாக அவர்கள் செய்யும் தொழிலையும் அவர்கள் கூந்தல் இழந்து வளையல்கள் இழந்து அழகிழந்து காணப்பட்டனர் என்று கூறுகின்றனர். ஐந்தாம் கூற்று கரிகாலனை இழந்த அவனின் மனைவிகள் பூவையும் இலையையும் இழந்து காணப்படும் வேங்கை மரம் போல

அழகிழந்து காணப்பட்டனர் என்றும் ஆறாம் கூற்றில் புலவர் கணவனை இழந்து வாடும் பெண்ணின் துயரைக் கூறாமல் அவளின் கைம்மைத் தோற்றத்தினை வீரனுடைய இல்லத்தின் தோற்றத்தோடு ஒப்பிட்டு இவள் போல் நீயும் பொலிவிழந்து காணப்படுகிறாய் என்று கூறுகிறார்.

இக்கூற்றுகளின் வழி சங்க காலத்தில் பெண்களை ஓர் அழகுப் பொருளாகப் பார்த்துள்ளனர் என்பது புலனாகின்றது. சங்க சமூகத்தில் பெண்களுக்கு அவர்களின் கணவனை வைத்து தான் மதிப்புத் தரப்பட்டுள்ளது. ஆறாம் கூற்றில் கணவனை இழந்த தலைவியைக் காட்டிலும் அவன் வாழ்ந்த வீடு முதன்மையாகக் கருதப்பட்டுள்ளது. தலைவன் சென்ற பின் அவன் வாழ்ந்த வீட்டிற்குத் தரும் மதிப்புக் கூட தலைவிக்குத் தரப்படவில்லை என்பது ஆணாதிக்கத்தின் உச்சமாகத் தோன்றுகிறது. சங்க காலத்தில் பெண்களுக்கு அவர்களின் கணவரின் நிலை வைத்தும் அவர்களின் தோற்றப் பொலிவைக் கொண்டும் மதிப்பு தரப்பட்டுள்ளது என்பது இக்கூற்றுகளின் வழி புலனாகின்றது.

பெண்பாற் புலவர்களின் கூற்றையும் ஆண்பாற் புலவர்களின் கூற்றையும் நோக்கும் வழி சங்க காலத்தில் கைம்மைப் பெண்களுக்கு அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்பதும் அவர்கள் உயிர்வாழ அத்தியவசியமான உணவில் கூட அவர்களுக்குக் கட்டுப்பாடு விதித்துச் சுவை இல்லாத அரோக்கியமில்லாத உணவு வழங்கித் துன்பப் படுத்தியதன் காரணத்தாலும் தன் கணவனை இழந்த பின்பு சமூகத்தில் தனக்கு மதிப்புக் குறைந்து துன்பியலுக்குத் தங்களை உதாரணமாகக் கூறும் நிலையினைப் பொருத்து வாழவியலாத மனநிலைக்குச் சங்க கைம்பெண்கள் தள்ளப்படுள்ளனர். இதனை கழி கல மகளிர் போல, வழி நினைந்திருத்தல், அதனினும் அரிதே! (புறம் 280:14-15), பாணர்கள் பசியால் வாழ்தலைக் காட்டிலும் கைம்பெண்கள் போல் வாழ்தல் அரிது என்ற கூற்றும் வள் இதழ் அவிழ்ந்த தாமரை நளி இரும் பொய்கையும், தீயும் ஓரற்றே! (புறம். 246: 14-15). கைம்பெண்ணாக வாழ்தல் என்பது தீயில் இறங்குவதைக் காட்டிலும் கொடுமையானது என்னும் கூற்றுகள் கைம்மை நோன்பின் துன்பதைக் கூறுகின்றது. இவ்வாறு கைம்மைத் துன்பத்தில் இருந்து தப்பிக்க எண்ணி உடன்கட்டை ஏறும் பெண்களை மூளைச் சலவைச் செய்து அவர்களைக்கைம்மை நோன்பு மேற்கொள்ள வற்புறுத்தி உள்ளனர் என்று பல்சான்றீரே! பல்சான்றீரே! செல்கெனச் சொல்லாது, ஒழிகென விலக்கும் பொல்லாச் சூழ்ச்சி பல்சான்றீரே! (புறம். 246:1-3). என்னும் கூற்று பகர்கின்றது.

மேற்கூறிய இருபார் புலவர்களின் கூற்றுகள் கால்லாடனாரைத் தவிர ஆண் புலவர்கள் எவரும் கைம்மை நோன்பின் துன்பத்தைக் கூறாமல் மாறாகக் கைம்மையின் போது பெண்களின் உருவத் தோற்றத்தினைக் கூறுகின்றனர். அது மட்டுமின்றிச் சங்கப் பாடலில் மனைவியை இழந்த கணவன் வருத்தப்படுவதாகவும் கைம்மை மேற்கொள்வதாகவும் குறிப்புகள் இல்லை. இக்கூற்றுகள் அடிப்படையில் சங்கச் சமூகம் ஆணாதிக்கச் சமூகமாக இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

முடிவுரை

சங்க காலத்தில் தமிழ்ப் பெண்கள் கணவனை இழந்து சரியான உணவில்லாமல் தலையில் முடியில்லாமல் கையில் வளையல்கள் அணியாமல் தரையில் உறங்குவதைக் காட்டிலும் கணவனை எரிக்கும் தீயில் தானும் எரிந்து உயிர் நீப்பதே மேலாகக் கருதினர். இவ்வாறு உடன்கட்டை ஏறும் பெண்களைச் சான்றோர்கள் மூளைச் சலவைச் செய்து கைம்மை நோன்பு

மேற்கொள்ள வைக்க முயன்றுள்ளனர். சங்க காலத்தில் ஆணும் பெண்ணும் சமமாகக் கல்வி கற்றார்கள். சமூக நிலையில் உரிமை பெற்றிருந்தார்கள் என்று நாம் அறிந்திருந்த நிலையில் கைம்பெண்களுக்கு அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மனைவியை இழந்த எந்த ஓர் ஆணும்கைம்மை மேற்கொண்டதாகக் குறிப்புகள் இல்லை. இதன் மூலம் சங்க காலம் ஆணாதிக்கச் சமூகமாக இருந்துள்ளது என்பது இக்கட்டுரையின் மூலம் புலனாகிறது.

துணைநின்றவை

1. பஞ்சாங்கம், க., நவீன கவிதையியல் எடுத்துரைப்பியல், காவ்யா பதிப்பகம், சென்னை, 2003.
2. இளம்பூரணர்(உரை.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முன்றாம் பகுதி), முல்லை பதிப்பகம், 2024.
3. சாமிநாதவையர், உ.வே. (குறிப்புரை), உ.வே.சாமிநாதவையர் நூல் நிலையம், சென்னை -901, பத்தாம் பதிப்பு 2022.
4. பழனிவேலு, கே.,சங்க கவிதை மொழி - அரசியல், மாற்று வெளியீட்டகம், சென்னை, 2018.
5. பழனிவேலு, கே., சிலப்பதிகாரம் எடுத்துரைப்பு கூற்று கோட்பாட்டு நோக்கு, மாற்று வெளியீட்டகம், சென்னை, 2018.
6. பாலையன், அ. (உரை), நற்றிணை முலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2019.
7. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ஏழாம்பதிப்பு, 2019.
8. கே. பழனிவேலு, கோட்பாடும் திறனாய்வும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2020.
9. சிவா,கி.,பத்துப்பாட்டின்எடுத்துரைப்பியல், இலட்சுமி பதிப்பகம், திருப்பத்தூர், 2020.

The Devotional Path that the Role of Kugan in Kambaramayana Reveals

Dr. M. Vijaya Sobha
Assistant Professor, Tamil Research Centre
S.T. Hindu College, Nagercoil

Abstract
Literature is the open book of life . In this literature, Love becomes important for man. Love is given by God. Being a slave to God,being taken as a refuge and being saved by his grace, is the path to your salvation. That is the reason for the greatness of life , the devotion of Kugan in The Kugapatalam, the devotion that does not consider material gain ,benefit or position , but loves Rama wholeheartedly and serves him. Kugan's devotion is considered a symbol of equality and trust. This research paper is a collection of essays that revels Kugan's love,devotion,bravery and morality.

Keywords: *Devotion, Senses, Honey, Fish, Virtue, Heroism, Friendship, Exchange*

References

1. Sivasubramanian, Tirukkural Thelivurai commercial publication thiruthangal, sivakasi626130
2. Balasubramanian , K.V puranaanooru , New century Book House (p) LTD , 2004
3. Kambaramayanam (Ayothiya kaandam pakuthi 2) Anna University 2010 second edition.

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.17256006